**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்</u>**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**
**தஞ்சாவூர்.**

**2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் வியாழக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 – பங்குனித் திங்கள் 10 ஆம் நாள்)**

**<u>அசல் வழக்கு எண். 37/2021 ல் இடைநிலை மனு எண்.51/2021</u>**

K. கண்ணதாசன் **.............மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

M. ஞானசேகரன் **...........எதிர்மனுதாரர்/பிரதிவாதி**

இம்மனுவானது, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **2.3.2021** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, **11.3.2021** அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு **5.3.2022** அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. **T. காமராஜ்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. **சிவராஜ்** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இம்மனுவை இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

(1) அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி பெயரில் பின்னாளில் ஏற்படக்கூடிய டிகிரித் தொகையும் சேர்த்து சுமார் ரூ.20,00,000/-த்தை செக்யூரிட்டியாக கொடுக்க

உத்தரவிடக் கோரியும், அவ்வாறு கொடுக்காத பட்சத்தில் மனு சொத்தை தீர்ப்புக்குமுன் பற்றுகை செய்ய உத்தரவிடக் கோரியும், அவசர நிலை கருதி இம்மனு முடியும் வரையில் மனு சொத்தை பற்றுகை செய்ய உத்தரவிடக் கோரியும் மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வ.வி.மு. சட்டம் கட்டளை 38 விதி 5 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி ஆவணத்தின் சுருக்கம்</u>** :

(2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரர்/வாதியின் நண்பர் ஆவார். பிரதிவாதி இராணுவத்தில் வேலை செய்து பணி ஓய்வு பெற்று, தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறார். பிரதிவாதி 4.12.2018 அன்று வாதியை அணுகி தஞ்சாவூர் விளார் கிராமம், ஸ்ரீ விநாயகா கார்டன், மனை எண்.17, S. No.204/263 என்ற முகவரியில் அவர் கட்டி வரும் வீட்டிற்கான கட்டுமானப்பணிகளை செய்து முடிப்பதற்காகவும், வீட்டிற்கு வர்ணம் பூசுவதற்காகவும், வீட்டிற்கான உட்புற வேலைகளை செய்வதற்காகவும், அவரது குடும்பச் செலவிற்காகவும் ரூ.12,00,000/- ரொக்கப்பணத்தை கடனாக கேட்டுள்ளார். மனுதாரர்/வாதி தெரிந்த நபர்களிடம் 12% வட்டிக்கு கடன் வாங்கி 12.12.2018 அன்று ரொக்கப்பணத்தை எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார். கடன் தொகையை பெற்றுக் கொண்ட எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதியிடம் தாங்களோ தங்கள் அதிகாரம் பெற்ற முகவர்களோ கேட்கும்போது மறுப்பேதுமின்றி கடன் தொகையை அசலும் வட்டியுமாக கொடுத்துவிடுவதாக உறுதி கூறி கடனுறுதி சீட்டில் கையொப்பமிட்டு

கொடுத்துள்ளார். அப்போது எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல், வாக்காளர் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல், இராணுவத்தில் வேலை பார்த்ததற்கான அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை பார்ப்பதற்கான அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகலையும் கொடுத்துள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி வாதியிடம் வாங்கிய கடனிற்கு ஆதாரமாக அவரது தாயார் பத்மாவதி பெயரில் உள்ள இடத்திற்கான அசல் பத்திரத்தையும் அத்தாட்சியாக கொடுத்துள்ளார். பலமுறை எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடம் பணத்தை திரும்ப கேட்டபோது எதிர்மனுதாரர்/பிரதிவாதி உறுதி அளித்தபடி பணத்தை திருப்பித்தராமல் வீண் காலதாமதம் செய்துவந்தார். இந்நிலையில் கடன் கொடுத்த நபர்கள் மனுதாரர்/வாதியிடம் நெருக்கடி கொடுத்து வந்ததால் 1.2.2020 அன்று எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நேரில் அணுகி தான் கடனாக கொடுத்த பணத்தை திருப்பித்தருமாறு கேட்டபோது எதிர்மனுதாரர்/பிரதிவாதி 18.2.2020 தேதியிட்ட அவர் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர் வடக்கு வாசல் கிளைக்கான 015501 மற்றும் 015502 என்ற எண் கொண்ட அவரது பெயரில் உள்ள காசோலைகளை தலா ரூ.6,00,000/- வீதம் ரூ.12,00,000/-ற்கான இரண்டு காசோலைகளை பூர்த்தி செய்து கையொப்பமிட்டு கொடுத்ததுடன் அவரது வங்கிக் கணக்கில் போதுமான பணம் இருப்பதாகவும், வசூலுக்குப் போட்டு பணம் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் கூற்றை உண்மையென நம்பி மனுதாரர்/வாதி கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி,

அம்மாபேட்டை கிளையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கொடுத்த இரண்டு காசோலைளையும் 18.2.2020 அன்று வசூலுக்கு போட்டபோது, பிரதிவாதியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்ற காரணத்தால் மேற்படி காசோலைகள் 21.2.2020 அன்று திருப்பப்பட்டது. பின்னர் வழக்கறிஞர் மூலம் தாவா தொடர இருப்பதாக பிரதிவாதியிடம் மனுதாரர்/வாதி தெரிவித்துள்ளார். உடனே எதிர்மனுதாரர்/பிரதிவாதி வழக்கு ஏதும் தாக்கல் செய்ய வேண்டாம் என்றும், இன்னும் இரண்டு மாதத்தில் கடன் தொகையை அசலும் வட்டியுமாக கொடுத்துவிடுவதாக உறுதி அளித்துள்ளார். அதன்பின்னர் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடன் தொகையை திருப்பித்தராமல் மோசடி செய்து ஏமாற்றி வருகிறார். எதிர்மனுதாரர்/வாதியிடம் வாங்கிய கடன் தொகையை கொடுக்கக்கூடிய அளவிற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதியிடம் போதுமான அளவு கையில் பணமும், சொத்தும் உள்ளதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு கடன் நிவாரணச்சட்ட அனுகூலங்கள் பொருந்தாது. கடனுறுதி சீட்டின்படி பிரதிவாதி வாதிக்குதர வேண்டிய கடன் தொகையை வசூல் செய்வதற்கான சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதை தெரிந்து கொண்டு எதிர்மனுதாரர் தனக்கு சொந்தமான விளார் கிராமம் ஸ்ரீ விநாயகா கார்டன் மனை எண். 17 என்ற முகவரியில் கட்டிய வீட்டை வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்து வருவது தெரிய வருகிறது. அதனால், எதிர்மனுதாரரை மேற்சொன்ன தொகையை செலுத்தி வைக்க உத்தரவிடக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் இம்மனுவில் கண்ட மேற்சொன்ன சொத்தை விற்றுவிட்டால் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய

தீர்ப்பாணைத்தொகையை வசூல் செய்வதில் மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும்- மனுச்சொத்தைத் தவிர வேறு சொத்துக்கள் இருப்பதாக மனுதாரர்/வாதிக்கு தெரியவில்லை. எனவே, அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி பெயரில் பின்னாளில் ஏற்படக்கூடிய டிகிரித் தொகையும் சேர்த்து சுமார் ரூ.20,00,000/-த்தை செக்யூரிட்டியாக கொடுக்க உத்தரவிடக் கோரியும், அவ்வாறு கொடுக்காத பட்சத்தில் மனு சொத்தை தீர்ப்புக்குமுன் பற்றுகை செய்ய உத்தரவிடக் கோரியும், அவசர நிலை கருதி இம்மனு முடியும் வரையில் மனு சொத்தை பற்றுகை செய்ய உத்தரவிடக் கோரியும் இம்மனுவை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

(3) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படியும் பொருண்மைகள் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்/பிரதிவாதி 4.12.2018 அன்று மனுதாரர்/வாதியிடம் கட்டுமானப்பணிகளை செய்து முடிக்கவும், வீட்டிற்கு வர்ணம் பூசுவதற்காகவும், குடும்ப செலவிற்காகவும் ரூ.12,00,000/- கடனாக கேட்டதாகவும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி, யாரிடமாவது வட்டிக்காவது பணம் வாங்கிக் கொடுங்கள் என்று கேட்டதாகவும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் மனுதாரர் 12.12.2018 அன்று ரூ.12,00,000/- ரொக்க பணத்தை 12% வட்டிக்கு கொடுத்ததாகவும், கேட்கும்போது மறுப்பேதுமின்றி கடன்தொகையை அசலும் வட்டியுமாக கொடுத்துவிடுவதாக உறுதி அளித்து சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதிச்சீட்டில் கையொப்பமிட்டு கொடுத்ததாகவும் கூறுவது தவறு. மனுதாரர்/வாதியிடமிருந்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி கடன்

தொகையை வாங்கியபோது அவர் ஆதார் அட்டை, இந்திய தேர்தல் ஆணையத்தில் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை, இராணுவத்தில் வேலை செய்ததற்கான அடையாள அட்டை, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை பார்த்ததற்கான ஆளறி அட்டை கொடுத்ததாக கூறியுள்ளது தவறு. எதிர்மனுதாரர்/பிரதிவாதி மனுதாரர்/வாதியிடம் வாங்கிய கடனிற்கு ஆதாரமாக அவரது தாயார் பத்மாவதி பெயரில் கண்ணந்தங்குடி மேலையூர் கிராமத்தில் உள்ள பட்டா பாஸ் புத்தக எண் 250818, பட்டா எண் 1216 சர்வே எண் 378-5 ஏர்ஸ் 0.10.5 க்கு 26 செண்ட் இடத்திற்கான அசல் பத்திரம் கொடுத்ததாக கூறியுள்ளது தவறு. மனுதாரர்/வாதியிடம் அவருக்கு கடன் கொடுத்த நபர்கள் கடன் தொகையை கேட்டு வற்புறுத்தி நெருக்கடி கொடுத்து வந்ததால் மனுதாரர்/வாதி 1.2.2020 அன்று எதிர்மனுதாரர்/பிரதிவாதியை நேரில் அணுகி மனுதாரர்/வாதி கடனாக கொடுத்த பணத்தை திருப்பித்தருமாறு கேட்டபோது எதிர்மனுதாரர்/பிரதிவாதி 18.2.2020 அன்று அவரது கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர் வடக்கு வாசல் கிளைக்கான 015501 மற்றும் 015502 என்ற எண் கொண்ட அவரது பெயரில் உள்ள காசோலைகளை தலா ரூ.6,00,000/- வீதம் ரூ.12,00,000/- இரண்டு காசோலைகளையும் பூர்த்தி செய்து கையொப்பமிட்டு கொடுத்ததும் அவரது வங்கி கணக்கில் போதுமான பணம் இருப்பதாகவும், மேற்படி காசோலையை வசூலுக்குப் போட்டால் உறுதியாக பணம் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறியது தவறு. உண்மையில் இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவரது வீட்டிற்கு பெயிண்ட் அடிப்பதற்காக மனுதாரர்/வாதியிடம் கூறியதன் பேரில் மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதி

வீட்டில் ஆட்கள் வைத்து பெயிண்ட் அடித்தபோது, எதிர்மனுதாரர்/பிரதிவாதி வீட்டிலிருந்த தஞ்சாவூரில் உள்ள வீட்டிற்கான அசல்பத்திரம், கண்ணந்தங்குடி கிராமத்தில் உள்ள 3 இடங்களுக்கான அசல் பத்திரங்கள் மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் நண்பருக்கு சொந்தமான இடத்திற்கான அசல் பத்திரங்கள் மற்றும் காசோலைகள் ஆகியவற்றை மனுதாரர்/வாதி எடுத்துச் சென்றுள்ளார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி பல இடங்களில் தேடியுள்ளார். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. மேற்கண்டவாறு எதிர்மனுதாரர்/பிரதிவாதி வீட்டில் எடுத்த ஆவணங்களை வைத்து மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதி பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடியாக வேண்டும்.

**(4) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்</u>**

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.**

(5) இம்மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 10 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் இல்லை. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

**<u>தீர்வு</u>**

(6) இருதரப்பு வாதங்களும், சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி, மனுதாரர்/வாதியை

அனுகி அவரது வீடு கட்டுமானப்பணியை செய்து முடிப்பதற்காக ரூ.12,00,000/- கடன் கேட்டதாகவும், அவ்வளவு தொகை மனுதாரரிடம் இல்லாததால் அவர் தனக்குத்தெரிந்த நபர்களிடம் 12 % வட்டிக்கு கடன் வாங்கி பிரதிவாதி மீது உள்ள நம்பிக்கையால் 12.12.2018 அன்று ரூ.12,00,000/- வட்டிக்கு எதிர்மனுதாரருக்கு கடனாகக் கொடுத்ததாகவும், அந்த கடன் தொகையை அசலும் வட்டியுமாக சேர்த்து கொடுத்து விடுவதாக உறுதியளித்து சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதிச்சீட்டு, அவரது ஆதார் அட்டையின் ஜெக்ஸ் நகல், வாக்காளர் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல், இராணுவத்தில் வேலை பார்த்ததற்கான அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை பார்ப்பதற்கான ஆளறி அட்டையின் ஜெராக்ஸ் நகலையும் கொடுத்ததாகவும், எதிர்மனுதாரரின் தாயார் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தக எண். 250818 பட்டா எண் 1216 ன் அசலையும் கொடுத்திருந்ததாகவும், ஆனால், எதிர்மனுதாரரை பலமுறை கேட்டும்கடனை செலுத்தவில்லை என்றும், மனுதாரருக்கு கடன் கொடுத்திருந்த நபர்கள் மனுதாரரை நெருக்கவும், அவரும் எதிர்மனுதாரரிடம் கடனைக் கொடுக்க வற்புறுத்தியதாகவும், அப்போது எதிர்மனுதார் 18.2.2020 தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வடக்கு வாசல் கிளைக்கான 015501 மள்ளும் 015502 என்ற எண்ணுள்ள காசோலைகளை தலா ரூ.6,00,000/-வீதம் ரூ.12,0,000/-த்திற்கு பூர்த்தி செய்து கையொப்பமிட்டுக் கொடுத்ததாகவும், அவற்றை வங்கியில் செலுத்தினால் பணம் எடுத்துக்கொள்ளலாம் என உறுதிசெய்ததாகவும், அதன்பேரில் மனுதாரர் அவரது இந்தியன் வங்கி அம்மாப்பேட்டை கிளையில் 18.2.2020 ஆம் தேதி வசூலுக்கு போட்டபோது

எதிர்மனுதாரரின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை என மேற்படி காசோலைகள் 21.2.2020 ஆம் தேதி திருப்பப்பட்டதாகவும், அவ்வாறு திருப்பப்பட்ட காசோலைகள் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 எனவும், மனுதாரர் எதிர்மனுதாரரிடம் அதுகுறித்து தெரிவித்ததாகவும், தான் வழக்கறிஞரை சந்தித்து நடவடிக்கை எடுக்கப்போவதாக தெரிவித்தததாகவும், பிரதிவாதி தான் வாங்கிய கடனை கொடுத்துவிடுவதாகவும், நடவடிக்கை எடுக்க வேண்டாமென தெரிவித்ததாகவும், அதனால், மனுதாரர் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், ஆனால், அதன்பின்னரும் எதிர்மனுதாரர் தொகை எதுவும் செலுத்தவில்லை என்றும், எதிர்மனுதாரர் 12.12.2018 அன்று வாங்கிய கடன் தொகை ரூ.12,00,000/- பிறகு 28.2.2021 வரையான காலத்திற்கு வட்டி சேர்த்துமொத்தம் ரூ.15,19,561/- செலுத்தி வைக்க வேண்டியிருப்பதாகவும், இந்நிலையில் மனுதாரர் வேறு நடவடிக்கை எடுப்பதைத் தெரிந்துகொண்டு எதிர்மனுதாரர் தனக்கு சொந்தமான விளார் கிராமம் ஸ்ரீ விநாயகா கார்டன் மனை எண். 17 என்ற முகவரியில்கட்டிய வீட்டை வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்து வருவது தெரிய வந்ததாகவும், அதனால், எதிர்மனுதாரரை மேற்சொன்ன தொகையை செலுத்தி வைக்க உத்தரவிடக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் , அதனால் எதிர்மனுதாரரை மேற்சொன்னதொகையை செலுத்தி வைக்க எதிர்மனுதாரர் இம்மனுவில் கண்ட மேற்சொன்ன சொத்தை விற்றுவிட்டால் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய தீர்ப்பாணைத்தொகையை வசூல் செய்வதில் மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், மனுச்சொத்தைத் தவிர வேறு சொத்துக்கள் இருப்பதாக

மனுதாரர்/வாதிக்கு தெரியவில்லை என்றும், அதனால் தீர்ப்பிற்கு முன்னர் மனுச்சொத்தை பற்றுகை செய்ய உத்தரவிட வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

(7) எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில், மனுதாரர் தரப்பு விபரங்களை மறுத்தும், எதிர்மனுதாரர் வீட்டிற்கு பெயிண்ட் அடிப்பதற்காக எதிர்மனுதாரர், மனுதாரரிடம் கூறியதன்பேரில் மனுதாரர் ஆட்கள் வைத்து எதிர்மனுதாரரின் வீட்டில் பெயிண்ட் அடித்துள்ளதாகவும், அவ்வாறு பெயிண்ட் அடிக்கும்போது மனுதாரர், எதிர்மனுதாரரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த எதிர்மனுதாரரின் வீட்டிற்கான அசல் பத்திரங்கள் கன்னந்தங்குடி கிராமத்தில் உள்ள 3 இடங்களுக்கான அசல் பத்திரங்கள் மற்றும் காசோலைகள் ஆகியவற்றை எடுத்துச்சென்றுவிட்டதாகவும், எதிர்மனுதாரர் அதுகுறித்து பல இடங்களில் தேடியுள்ளதாகவும் ஆனால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், மேற்சொன்னபடி எடுத்த ஆவணங்களைவைத்து மனுதாரர் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் வாதிட்டுள்ளார்.

(8) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலிக்கையில், 12.12.2018 தேதியிட்ட ரூ.12,00,000/-த்திற்கான கடனுறுதிச்சீட்டை ம.சா.ஆ.1 ஆகவும், எதிர்மனுதாரரின் தாயார் பெயரிலுள்ள கிரய ஆவணத்திற்கான அசலை ம.சா.ஆ.2 ஆகவும், எதிர்மனுதாரரின் வங்கிக்கணக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வடக்குவாசல் கிளையின் காசோலை எண். 0155501 ஐ ம.சா.ஆ.3 ஆகவும்,

காசோலை எண். 0155502 ஐ ம.சா.ஆ.4 ஆகவும், எதிர்மனுதாரரின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை என காசோலை எண். 0155501 ஐ திருப்பப்பட்டதற்கான குறிப்பு ம.சா.ஆ.5 ஆகவும், காசோலை எண். 0155502 ஐ திருப்பப்பட்டதற்கான குறிப்பு ம.சா.ஆ.6 ஆகவும், எதிர்மனுதாரரின் முன்னாள் ராணுவத்தினர் என்ற அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகலை ம.சா.ஆ.7 ஆகவும்,, எதிர்மனுதாரரின் வாக்காளர் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகலை ம.சா.ஆ.8 ஆகவும்,, அவரது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகலை ம.சா.ஆ.9 ஆகவும்,, துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகலை ம.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்துள்ளார். அவை மனுதாரர் சொன்னவாறு எதிர்மனுதாரர் கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்து ரூ.12,00,000/- கடன் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.2 அசல் பத்திரம் ம.சா.ஆ.7 முதல் 10 வரையான அடையாள அட்டைகளையும் கொடுத்துள்ளார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும், எதிர்மனுதாரர், மனுதாரரிடம் கடன் தொகைக்கான காசோலைகளையும் வழங்கியுள்ளார் எனவும், அவை வங்கியில் எதிர்மனுதாரரின் கணக்கில் போதிய பணமில்லை என திருப்பப்பட்டுள்ளன என்பதும் தெரிய வருகிறது. எதிர்மனுதாரின் கூற்றிலிருந்து அவை வழக்கின் தோதிற்காக ஒரு எதிர்வாதம் செய்யவேண்டும் என்பதற்காக செய்ததுபோல் உள்ளது. மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் விளார் கிராமம் ஸ்ரீ விநாயகா கார்டன் மனை எண். 17 ல் கண்ட மனுச்சொத்தை வேறு நபர்களுக்கு விற்பனைசெய்ய ஏற்பாடு செய்து வருவதாக தெரிய வந்ததாகவும், அதனால் அசல் வழக்கும் இந்த மனுவும் தாக்கல்

செய்யப்பட்டதாக சொல்லியுள்ளார். தனக்கு எதிராக பிறப்பிக்கப்படவிருக்கும் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதை காலதாமதப்படுத்தும் கருத்துடன் அவ்வாறு தன்னுடைய சொத்தை விற்பனை செய்யவிருக்கிறார் என்பதைக் காட்டுவதற்கு மனுதாரர் தரப்பில் மனுதாரரின் வாய்மொழி கூற்றைத்தவிர வேறு சாட்சியமில்லை. எதிர்மனுதாரர் மனுச்சொத்தை விற்பனை செய்யவிருக்கிறார் என்ற விபரம் யார் மூலம் எவ்வாறு தனக்கு தெரிய வந்தது என்பது குறித்தும் மனுதாரர் இம்மனுவில் சொல்லவில்லை. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் எதிர்மனுதாரர் தனக்கு எதிராக பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணையை நிறைவேற்றுவதில் தாமதப்படுத்தும் நோக்குடன் அல்லது தடை செய்யும் நோக்குடன் உரிமை மாற்றம் செய்யவிருக்கிறார் என்பதற்கு சாத்தியக்கூறு இருப்பதற்கு சான்றாவணம் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில், **Padmini /vs/ Anandhan 2014(3) CTC 792 Madras High Court (DB)** என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பில் Order of attachment could be granted only when property is about to be disposed. Bold allegations are not enough to secure order of attachment. In absence of specific allegations, requirement of O.38.R.5 not made out and court will not grant extraordinary remedy attachment before Judgment. Such power should not be exercised mechanically or just for asking.

என சொல்லப்பட்டுள்ளதைக் கருத்தில்கொள்கையில், மனுதாரருக்கு எதிர்மனுதாரரின் சொத்தை தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்யக்கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றே இந்த நீதிமன்றம் முடிவுசெய்கிறது. எனவே, இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்த பிரச்சினைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2022 ஆம் ஆண்டு மார்ச் **திங்கள் 24 ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**

**நீதிபதி, தஞ்சாவூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் இல்லை**

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1. | 12.12.2018 | மனுதாரருக்கு, எதிர்மனுதாரர் எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டின் அசல் |
| ம.சா.ஆ.2. | 12.7.2006 | பத்மாவதி என்பவருக்கு மாரியம்மாள் என்கிற அமுதா என்பவர் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் அசல் |
| ம.சா.ஆ.3 | 18.2.2020 | மனுதாரர் பெயரில் உள்ள காசோலை அசல் |
| ம.சா.ஆ.4 | 18.2.2020 | மனுதாரர் பெயரில் உள்ள காசோலை அசல் |
| ம.சா.ஆ.5 | ................. | வங்கியிலிருந்து போதிய பணமில்லை என காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பு அசல் |
| ம.சா.ஆ.6 | ................. | வங்கியிலிருந்து போதிய பணமில்லை என காசோலை |

| | | |
|---|---|---|
| | | திருப்பப்பட்டதற்கான குறிப்பு அசல் |
| ம.சா.ஆ.7 | ................. | எதிர்மனுதாரர் முன்னாள் ராணுவத்தினர் என்ற அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.8 | ............... | எதிர்மனுதாரரின் வாக்காளர் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.9 | .............. | எதிர்மனுதாரரின் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் |
| ம.சா.ஆ.10 | ................. | துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் |

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**

**நீதிபதி, தஞ்சாவூர்.**

**உத்தரவு**

**அசல் வழக்கு எண். 37/2021ல்**

**இடைநிலைமனு எண்.51/2021**

**நாள். 24.3.2022**